செய்தி வெளியீடு எண். 01-2017 நாள்: 01.10.2017

## விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் கல்லப்பட்டு ஊராட்சியில் கிராம வளம் மற்றும் தூய்மைக்கான இருவார இயக்கத்தின் மூலம் அந்தியோதியா திட்டத்தின்கீழ் தனிநபர் கழிப்பறை கட்டும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

*****

விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் கல்லப்பட்டு ஊராட்சியில் கிராம வளம் மற்றும் தூய்மைக்கான இருவார இயக்கத்தின் மூலம் அந்தியோதியா திட்டத்தின்கீழ் தனிநபர் கழிப்பறை கட்டும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.10.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட ஊரக வாளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

தூய்மைக்கான இருவார இயக்கம் 01.10.2017 முதல் 15.10.2017 வரை நடைபெற உள்ளது. இத்திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் கல்லப்பட்டு ஊராட்சியில் இன்றைய தினம் துவக்கி வைத்தார். கல்லபட்டு ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்தம் தூய்மைப் பணிகளை, அந்தியோதியா திட்டத்தின்கீழ் கணக்கெடுக்கும் பணியினையும், தனிநபர் கழிப்பறை கட்டும் பணியினையும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு உறுதிமொழி மற்றும் சுகாதார உறுதி மொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பொதுமக்கள் எடுத்துக் கொண்டனர். தூய்மையே சேவை முனைப்பியக்கத்தின் கீழ், கல்லப்பட்டு கிராமத்தில் துப்புரவு செய்யப்பட்டுள்ள குளத்தினை ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விளம்பரப் பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கல்லப்பட்டு ஊராட்சி அலுவலகத்தில் மரக்கன்றுகளை நட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் திரு.சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சீனுவாசன், உதவி திட்ட அலுவலர் திரு.மில்டன், உதவி செயற்பொறியாளர் திரு.கிருஷ்ணகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நாராயணன், திரு.கணேசமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.